YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்ரா
267, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 29 செவ்வாய்க்கிழமை [15-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 315

# மேற்குலகத் தூதுக்குழு யாழ்ப்பாணம் வருகை!

## சமாதான முன்முயற்சியாக புலிகளுடன் பேச்சு நடத்தும்

யாழ்ப்பாணம், அக்டோபர் 15

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக மேற்குலகத் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்திருக்கிறது.

மூன்று பிரதிநிதிகளைக் கொண்ட இந்த சமாதானக்குழு, தனது முயற்சியின் ஒரு நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

''குவாக்கர்ஸ்'' [Quakers] சமாதான இயக்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவே யாழ்ப்பாணம் வந்திருக்கிறது.

இந்தக் குழுவில் கனடாவைச் சேர்ந்த போல் எச்மன்ங், அமெரிக்காவைச் சேர்ந்த ஜே... பக்ச்சாக்லை, இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் இராசமூர்த்தி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த சமாதானக் குழுவினர் ஏற்கெனவே இரு தடவைகள் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்முறை கொழும்பில்

[8 ஆம் பக்கம் பார்க்க]

### பலாலியில் படையினர் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 15

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று வேவு பார்க்க வளலாய்ப் பகுதி நோக்கி முன்னேறி வந்த படையினரில் மூவர் கால்களை இழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணியளவிலும் பின்னர் நண்பகல் 1.30 மணியளவிலும் வேவு பார்க்க வெளிவந்த படையினர், புலிகளால் புதைக்கப்பட்ட மிதிவெடிகளில் சிக்கினர் என்றும்—

இதனால் மூன்று படையினர் கால்களை இழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### ஆனையிறவில் மோதல்

யாழ்ப்பாணம், அக். 15

ஆனையிறவு முகாம் கடுக்காய் வெட்டை காவலரணில் இருந்து நேற்று நண்பகல் 11-15 மணியளவில் சுமார் 75 யார் வரையில் முன்னேறிய படையினர் மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

பலத்த இழப்புடன் படையினர் முகாம் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### பொன்னாலையில் தொடர்ந்து ஷெல்!

யாழ்ப்பாணம், அக். 15

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கி நேற்றிரவும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் இரவும், நேற்றிரவு 8 மணியளவிலும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காரைநகர் கடற்பிராந்தியத்திலிருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களும் நடத்தினர். (உ-15)

### வல்வையிலும் பீரங்கித்தாக்கு!

வடமராட்சி, அக். 15

நேற்று முன்தினம் மாலையில் வல்வெட்டித்துறை கடற்பகுதியில் இருந்தும் குடியிருப்புகளை நோக்கி படையினர் சிலமணிநேரம் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-165)

### ஹெலி நோட்டம்

வடமராட்சி, அக். 15

பருத்தித்துறை, கொடிகாமம், வல்லைப் பகுதியில் நேற்று ஹெலிகொப்டர் ஒன்று தாழப்பறந்து நோட்டமிட்டது. [உ-165]

### வடக்கே மண்ணெண்ணெய் அனுப்ப புதிய ஏற்பாடு

கொழும்பு, அக். 15

வவுனியாவுக்கு வடக்கே, தேவையான மண்ணெண்ணெயை கொண்டு வருவதற்கு வசதியாக, அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வர்த்தகர்கள் வவுனியாவிலேயே அதனைக் கொள்வனவு செய்ய ஏற்பாடாகியுள்ளது.

புனர்வாழ்வுத் துறை அமைச்சு இதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகிறது.

இப்போது அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வர்த்தகர்கள், மண்ணெண்ணெய்யை அநுராதபுரத்தில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன நிலையத்திலிருந்தே வாங்குகிறார்கள். அதற்கான அனுமதியைக் கொழும்பில் பெற்றுக் கொள்கிறார்கள்.

எனினும் கொழும்பில் அனுமதி பெறப்பட்ட அளவுக்குக் குறைவான அளவே வடக்கே வந்து சேர்கிறது. இது குறித்து புனர்வாழ்வுத் துறை அமைச்சுக்குக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து, கொழும்பில் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்துக்கு வவுனியாவிலேயே

[8 ஆம் பக்கம் பார்க்க]

### தென்மராட்சியில் குண்டுச் சத்தம்

தென்மராட்சி, அக். 15

நேற்று அதிகாலை 12-10 மணியளவில் தென்மராட்சி முகமாலை, எழுதுமட்டுவாள் பகுதியில் தொடர்ச்சியாகக் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. இதனால் அவ்வேளை இத்தாவில், இந்திராபுரம் பகுதி மக்கள் பதற்றம் நிலவியது.

இதே வேளை நேற்று முன்தினம் பகல் தென்மராட்சி இழக்கும் பகுதியில் பீரங்கிப் படையிலிருந்து தொடர்ச்சியாக பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (உ-117)

### திரியேட்டர் கதிரையில் சடலங்கள்

## சென்னையில் மூன்று பேர் சயனைட் அருந்தி மரணம்

### அவர்களில் இருவர் முஸ்லிம்கள்

சென்னையில் உள்ள சினிமாத் தியேட்டர் ஒன்றில் 3 பேர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர்.

கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் முஸ்லிம்களான இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

இவர்கள் இருவரும் வண்ணாரப் பேட்டையில் உள்ள இரும்புப் பட்டறையில் வேலை செய்தவர்கள் என்றும்—

இவர்களது பெயர் முபாரக் ஹுசேய்ன் [வயது 18], அப்துல் மஜீத் [வயது 16] என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க மூன்றாவது நபரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை.

படம் முடிந்த பின்னர் தியேட்டர் ஊழியர்கள் தியேட்டரை துப்பரவு செய்ய ஆரம்பித்த போது தியேட்டரின் ஒரு பகுதியில் மூன்று வாலிபர்கள் அமர்ந்த நிலையில் இறந்தனர் என்றும்—

தியேட்டர் ஊழியர்கள் அம்மூவரையும் தட்டி எழுப்ப முற்பட்டபோது அவர்களின் உடல்கள் சரிந்து விழுந்து, அவர்கள் பிணமாகக் கிடக்கக் காணப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களுக்கு சயனைட் எப்படிக் கிடைத்தது? ஏன் இதனை அருந்தினார்கள்?— என்பன குறித்து சென்னைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

### முச்சந்தி முரளி



அப்ப...... மழை காலத் [illegible] இலை குண்டு மழை பொழிய [illegible]

வன்முறைகளைக் கைவிட முன்வந்தால்:

## புலிகளை பேச்சுக்கு அழைக்க தயார் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, அக். 15

''விடுதலைப் புலிகள் வன்முறைகளைக் கைவிடத் தயார் என்றால், அவர்களைச் சமாதான மாநாட்டுக்கு அழைப்பதற்கு நான் தயாராக உள்ளேன்''

— இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா.

கொழும்பில் நடைபெறவிருக்கும் தெற்காசிய சம்மேளன விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் நேற்றுக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

கடந்த 2½ வருடங்களை —சவால் நிறைந்த காலத்தை— மக்களும், அரசினரும் கடந்துள்ளனர்.

நாகரிகமான சமுதாயத்தை நாசமாக்கும் நோக்குடன் இயங்கும் பயங்கரவாத இயக்கத்தை அரசு எதிர்பார்க்காத வகையில் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இந்தச் சவால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் படையினரும், பொலி

[8 ஆம் பக்கம் பார்க்க]

நீதிமன்றம் அனுமதி அளித்தது:

## திலீபனின் நினைவாக சென்னையில் மாநாடு!

### பொலிஸ் தடை நிராகரிப்பு

சென்னை, அக். 15

சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த திலீபன் நினைவாக சென்னையில் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு பொலிஸார் விதித்திருந்த தடையை நிராகரித்து சென்னை மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

சென்னையில் திலீபன் நினைவாக ''திலீபன் நற்பணி மன்றம்'' என்ற ஸ்தாபனம் இயங்கி வருகிறது.

இந்த மன்றம் கடந்த 27 ஆம் திகதி திலீபன் நினைவாக மாநாடு ஒன்றை நடத்துவதற்கு அனுமதி கோரி சென்னை பொலிஸ் கமிஷனருக்கு விண்ணப்பித்திருந்தது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு, கிழக்கு எல்லையில் லலித் குழு பிரசாரக் கூட்டம்

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிரான ஐ.தே.க. அதிருப்தியாளர் குழுவினர் வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்த விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''எல்லைப்புற கிராம மக்களே விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி ஆயுதங்களை வழங்கினாரா என்ற விடயத்தை முதலில் அவர் மக்களுக்கே விளக்கவேண்டும்.''

—இப்படி அதிருப்திக்குழுவின் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

''ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை நிராகரித்ததன் மூலம், அரசமைப்பை சீரமைப்பது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கான சந்தர்ப்பத்தை சபாநாயகர் தவறிப்போகச் செய்துவிட்டார்.

ஆகையினால் அரசமைப்பை சீரமைப்பது குறித்த பிரச்சினையை மக்கள் கூட்டங்களில் எடுத்துச் செல்லவிருக்கிறோம். இதற்காக நாடு முழுவதிலும் நாம் பிரசாரக் கூட்டங்களை நடத்தவுள்ளோம்.

வடக்கு, கிழக்கு எல்லைப் புறங்களில் இரண்டு கூட்டங்கள் நடைபெறும்''—

அதிருப்திக் குழுத்தலைவரான லலித் அத்துலத்முதலி இப்படிச் சொன்னார்.

அதிருப்திக் குழுவினர் இதுவரை நடத்திய பல பொதுக் கூட்டங்களில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு வருவதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. [இ-8]

## ஆனையிறவு முல்லைத்தீவு இடையே மாரி கால இராணுவ நடவடிக்கை!

கொழும்பு, அக். 15

ஆனையிறவுக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை மீட்கும் இராணுவ நடவடிக்கைத் திட்டம் ஒன்றை ஸ்ரீலங்கா இராணுவம் தயாரித்துள்ளது. எதிர்வரும் மாரி காலத்தில் இந்த இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உயர் இராணுவ அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

கடும் மழைக்கு மத்தியில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த இராணுவ நடவடிக்கை இரு தரப்புக்கும் கடும் சோதனையாக இருக்கும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யுத்தமுனையில் விடுதலைப் புலிகளால் ஆயிரக்கணக்கில் புதைக்கப்பட்டிருக்கும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### முல்லைத்தீவில் நேற்று விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், அக். 15

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான், தண்டுவான் பகுதியில் நேற்றுப் பகல் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நடத்தப்பட்ட இத்தாக்குதலில் தண்டுவான் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் பல்கலை. கல்லூரி:

### காமினி வித்தியாலயத்தை விட்டுக் கொடுக்க மறுப்பு

யாழ்ப்பாணம், அக். 15

வடமாகாணத்துக்கான பல்கலைக்கழக கல்லூரியை வவுனியா காமினி வித்தியாலயத்தில் ஆரம்பிக்க இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர்.

ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு பல்கலைக்கழகக் கல்லூரியை நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்ற அரசின் திட்டத்துக்கு ஏற்ப வடமாகாணத்துக்கான கல்லூரியை வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த வித்தியாலயத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் மீளவும் திரும்பும் போது அவர்களுக்கு இந்தக்

3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஒரு சோடி நல்லின பொமனேரியன் நாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வ. சபாரத்தினம் மூளாய் வீதி, மாவடி, வட்டுக்கோட்டை. [18458]

உறுதி எழுதும் படிவங்கள், நொத்தாரிஸ் மாதாந்த அட்டவணைப் படிவங்கள், பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு ஜே. எஸ் ரி. ஸ்ரேஷனறீஸ் கோட்டடி, 15 கண்டி வீதி, சாவகச்சேரி. [18457]

## ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ் ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும் பியூடோ என்ரபிறைசஸ் 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [இ/0694]

## தவறிவிட்டது

அற்புதம் பூமணி ஆகிய எனது இலங்கை வங்கி பாஸ் புத்தகம் 14 - 10 - 91 அன்று பலாலி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து முருகன் வீதி திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். [18463]

## திருமண சேவை

இலவச திருமண சேவையில் 30 வயது B Sc. ஆசிரியைக்கும், 33 வயது M Sc பொறியியலாளருக்கும், தாவரபோசன மணமக்களும், 27 வயது A/L படித்த அழகிய பெண்ணுக்கு வரனும் தேவை. இரு முத்திரை கவர்களுடன் விண்ணப்பிக்கவும். நேரடித் தொடர்பு: குமாரசாமி விமலா 958/8 K K S. வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4346)

---

# BITSMANS

கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.

## O/L வினா-விடை வகுப்புகள்

(வழமையான ஆசிரியர் குழுவினால்)

ஆரம்பம்:
16 - 10 - 1991
4-00 p. m.

[இ-0714]

---

# SHAMROCK ACADEMY

CHUNDIKULI, JAFFNA.

## A/L 93

ஆரம்பம்:
16 - 10 - 91 [புதன்]

கணித, விஞ்ஞான, வர்த்தக பாடங்கள்.

[எமது வழமையான ஆசிரியர் குழு]

[18466]

---

Personal

# New Science Centre

Elilakam Front Lane, JAFFNA.

## 93 A/L

★ கணித, உயிரியல் ★
விஞ்ஞானப் பிரிவு
நாளை ஆரம்பம்:
16—10—1 91
4 p.m.

★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

[இ-0816]

---

உள்ளூரில்
உற்பத்தி
விடுதலைக்கு
உயிர்நாடி.

---

# NEW SCIENCE ACADEMY

JAFFNA.

## A/L DAY CLASS

ஆரம்பம்: 14-10-1991

| | | |
|---|---|---|
| CHEMISTRY | — | சண் |
| PHYSICS | — | கணேசன் |
| BOTANY | — | குணசீலன் |
| ZOOLOGY | — | பிரபல ஆசிரியர் |
| PURE/APP MATHS | — | சந்திரமோகன் |

## 92 A/L

ORGANIC
By
சண்

ஆரம்பமாகிவிட்டன. [இ-0821]

---

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**1st in Com.**

விரிவுரைகள்:

ஆரம்பம்: 19—10—1991

## G. A. Q.

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

G. A. Q வகுப்புக்கு ஆங்கில இலக்கியத்தினை பாடமாக கற்க விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி,
அருள்நங்கை.

[இ-0722]

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| ஜனனம்: | மறைவு: |
|---|---|
| 3 | 11 |
| 3 | 10 |
| 1934 | 1990 |

## அமரர் இராசையா பாலசிங்கம்

திதி: 15 - 10 - 1991

அன்பின் சின்னமாய், பண்பின் பிறப்பிடமாய், எல்லோருக்கும் நல்லவராய் வாழ்ந்து, எம் இதயங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி, இன்றுடன் ஓராண்டாகியும் உங்கள் அன்பு நினைவுகள் எம் இதயங்களில் என்றும் அலைமோதுகின்றன. தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமகள், பேர்த்தி,
உற்றார், உறவினர்கள்.

கன்னிகா பவனம்,
வங்கவெட்டி,
வல்வெட்டித்துறை.

(183..)

---

# "யாழோசை"

## இசை வகுப்புக்கள்

★ வயலின் ★ கிற்றார்
★ புல்லாங்குழல் ★ ஓகன்

விஜயதசமியை முன்னிட்டு
புதிய வகுப்புக்கள் 17 - 10 - 1991
வியாழன் 4 00 மணியளவில் ஆரம்பமாகின்றன.

"யாழோசை"
நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி

[18467]

---

# கலைமகள் கல்வி நிலையம்

## 93 A/L கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்: 17 - 10 - 91 பி. ப. 3-30 மணிக்கு
[விஜயதசமி அன்று]

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | இ நித்தியானந்தன் [யாழ். வளாகம்] |
| கணக்கியல் | - | அ. சிறீஸ்கரன் [யாழ் வளாகம்] |
| வர்த்தகமும் நிதியும் | - | பிரபல ஆசிரியர் |
| தமிழ் | - | க. தர்மராஜா B. A |
| இந்துநாகரீகம், இந்து சமயம் | - | ந. நவரட்ணராஜா B A. |
| புவியியல் | - | பிரபல ஆசிரியர் |

நிர்வாகி,
கலைமகள் கல்வி நிலையம்,
மண்டுவில் அம்மன் கோவிலடி,
மீசாலை தெற்கு,
சாவகச்சேரி.

[18460]

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மணலாறு மாவட்டத்தில் வீரமரணமடைந்த



ஈழ மண்ணில்:
21 - 08 - 1970

●

ஈழ மண்ணிற்காக:
01 - 09 - 1991

●

திதி:
15 10 1991
செவ்வாய்க்கிழமை

## வீரவேங்கை கவாஸ்கர்

(செல்வன் கனகசபை சுவீந்திரன்)

ஒளி விளக்காய் சுடர்விட்ட
எங்கள் அன்பு மகனே சுவீந்தி
அன்பால் எம்மைக் கவர்ந்த கனியே!
இன்பம் நிறைந்த அன்புப் பொக்கிஷமே!
உம்மிழப்பால் நாம் வாடி மனம் சலித்தோம்!
நாம் இங்கு வாழும் சில நாட் பொழுதில்
உம் நினைவை எங்கள் இதயத்தில் சுமப்போம்
நாட்கள், மாதங்கள், வருடங்கள் ஓடலாம்
எம் இதயங்கள் உன் நினைவோடு உருண்டோடும்!
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டென்ன?
மாண்ட மாவீரன் நினைப்பை போற்றி
உத்தமனின் ஆத்ம சாந்திக்காக
அனைவரும் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணன்மார்,
பெரியம்மா, பெரியப்பா, சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

பத்தார்,

[18454]

---

# A/L 93

19 - 10 - 1991 முதல்

தாவரவியல்
## ஐங்கரநேசனின்
யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

[இ/0805]

---

# யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

[சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்]
யாழ்ப்பாணம்.

## A/L விஞ்ஞானம் 92, 93

| | | |
|---|---|---|
| தாவரவியல் | — | A. சிவவீரசிங்கம் 9 00 — 10-30 |
| இரசாயனவியல் | — | சத்திஸ் |

## A/L வர்த்தகம், கலை 92, 93

| | | |
|---|---|---|
| தமிழ் | — | நாகேஸ்வரன் M.A. 2 — 3 p. m |
| கணக்கியல் | — | குணேந்திரன் 4 — 5 p. m. |
| பொருளியல் | — | ரவீந்திரன் B. A (Hons ) 3 — 4 p. m. |
| புவியியல் | — | முருகையா B.A (Hons ) 4 — 5 p. m. |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| இந்துநாகரிகம் | — | பிரபல ஆசிரியர் |
| வீட்டுப்பணி | — | லோகா |
| அளவையியல் | — | பிரபல ஆசிரியர் |

## G. A. Q.

| | | |
|---|---|---|
| தமிழ் | — | நாகேஸ்வரன் M. A. |
| பொருளியல் | — | ரவீந்திரன் B. A. (Hons) |
| புவியியல் | — | முருகையா B. A. (Hons ) |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| இந்துநாகரிகம் | — | பிரபல ஆசிரியர் |

SPOKEN ENGLISH

தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியன இருமொழிகள் மூலமும் நடைபெறும்.

வகுப்புக்கள் ஆரம்பம்: 19—10—1991

[18469]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் அம்பலவாணர் முத்தையா

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 - 10 - 1909 | 15 - 09 - 1991 |

எங்கள் அன்புத் தந்தையே! எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ வைத்த தந்தையே! எங்கள் இதயத்தில் என்றும் தங்கள் இன்முகம் நீங்காது நிலைத்திருக்கும்;
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

பிரிவால் துயருறும்:
அன்னாரின் குடும்பத்தினர்.

"அன்னை இல்லம்",
74, காரைக்காடு வீதி,
யாழ்ப்பாணம்;

[18464]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தடை வதை!

வடபகுதிக்குத் துவிச்சக்கர வண்டிகளை (சைக்கிள்களை) எடுத்து வருவது தடை செய்யப்பட்டிருக்கிறது!

வடபகுதி வாழ் தமிழ் மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையின் கீழ் தடுக்கப்பட்டிருக்கும் ஆகப் பிந்திய பாவனைப் பொருள், துவிச்சக்கர வண்டியாகும்.

யுத்தம் தொடங்கியதில் இருந்து நீண்ட காலமாக, வடபகுதிக்கு என்னென்ன பொருள்கள் தடை செய்யப்படுகின்றன என்ற விவரம் உத்தியோகபூர்வமாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

சமீப காலமாகத் தான் தடைவிதிக்கப்படும் பொருள்களின் விவரம் வர்த்தமானி மூலமும், அதன் வழி பத்திரிகைகள் மூலமாகவும் பகிரங்கப்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் தடை செய்யப்பட்ட பாவனைப் பொருள்களின் பட்டியலில் துவிச்சக்கர வண்டியும் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பது சரிக்கு உறுதியான தகவல் இல்லை. ஆனால் நடைமுறையில் வவுனியாவைத் தாண்டி வடக்கே எவரும் துவிச்சக்கர வண்டிகளை எடுத்துவர முடியாது. [ஒருவர் பயணியாக ஒரு வண்டியைச் செலுத்தி வரலாம்.]

எரிபொருள்கள் தடை செய்யப்பட்டு விட்டன. அதனால் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக வடபகுதி மக்கள் சகலரினதும் பொது வாகனமாகத் துவிச்சக்கர வண்டியே மாறியுள்ளது. முன்னர் காரில் பயணம் செய்தவர்கள் கூட இப்போது தங்கள் அலுவல்களைத் துவிச்சக்கர வண்டிகளிலேயே ஓடி ஓடிச் செய்கிறார்கள். ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி சகலருமே துவிச்சக்கர வண்டியே தஞ்சம் என்று இருக்க வேண்டியதாயிற்று.

இளையவர்கள் மட்டுமல்ல முதியவர்களும் அதன் துணையையே நாடியுள்ளனர். ஆபத்தான நோயாளி கூட, துவிச்சக்கர வண்டியில் தான் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகிறார். இதுவரை துவிச்சக்கரவண்டியைச் செலுத்த தெரியாதவர்கள் எல்லோரும் அதில் பயிற்சி பெற்று, இப்போது ஓடுகிறார்கள். அவர்களில் ஐம்பது அறுபது வயதுப் பெண்கள் கூட அடங்குகிறார்கள்!

அன்றாட வாழ்க்கையில் உணவுக்கு அடுத்தது துவிச்சக்கர வண்டி என்ற நிலை வடபகுதித் தமிழருக்கு ஏற்பட்டிருக்கிறது. அண்ணன், தம்பி இல்லாவிட்டாலும் சமாளித்துக் கொள்ளலாம்; ஒரு துவிச்சக்கர வண்டி இல்லாமல் அன்றாட வாழ்க்கையை இயக்கமுடியாது என்ற நிலை உருவாகியுள்ளது!

இந்தகைய ஒரு அதி அத்தியாவசியமான பொருளுக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது ஏன்? அதன் அர்த்தம் என்ன? அரசினால் தக்க காரணம் கூறமுடியுமா? வடபகுதித் தமிழ் மக்களின் வாழ்க்கையை மேலும் முடக்கி அவர்களை இன்னற்பட வைத்துச் சித்திரவதை செய்வதன்றி, வேறென்ன?

இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர்களை அழித்தொழிப்பதோடு மட்டுமன்றி, வாழ்க்கை ரீதியான நடைமுறை இன்னல்களை விளைவித்து அவர்களை உளவியல் ரீதியாகக் கொடுமைப்படுத்து வரும் அரசின் பயங்கரத் திட்டம். பல தடவைகள் இதனை இப்பத்தியில் சுட்டிக்காட்டி உள்ளோம்.

அந்தத் திட்டத்தின் ஒரு கட்டமே துவிச்சக்கர வண்டிகளையும் தடைசெய்வதாகும்.

# போராட்ட வளர்ச்சியில் இசைக்கும் ஒரு பங்குண்டு

## 'உதயம்' வெளியீட்டில் யோகி

யாழ்ப்பாணம், அக். 15

''எமது போராட்டத்தின் வளர்ச்சியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒரு பங்கை இசை வகித்து வருகிறது. உண்மையான உணர்வுகளுடன் கூடிய பாடல்கள் மூலம் நாம் தமிழ் நாட்டுக்குப் புது வழி காட்டுவோம். மலரப்போகும் எம் தமிழ் ஈழத்திலும் தூய தமிழின் முழக்கம் கேட்க வேண்டும்.''

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு யோகரத்தினம் யோகி.

'நிதர்சனம்' நிறுவனத்தின் எட்டாவது வெளியீடான 'உதயம்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

'நிதர்சனம்' பொறுப்பாளர் திரு. பரதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் கவிஞர் வாஞ்சிநாதன், மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

'உதயம்' ஒலிப்பதிவு நாடாவை உருவாக்க உதவிய கலைஞர்களை கௌரவிக்கு முகமாக விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் செல்வி ஜெயந்தி கலைஞர்களுக்குப் பரிசளித்தார்.

யாழ். மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைத்தார். கவிஞர் வாஞ்சிநாதன் அதனைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியின் முடிவில் 'உதயம்' ஒலிப்பதிவு நாடாவைத் தயாரித்த கலைஞர்கள் நடத்திய இசை நிகழ்ச்சியை மண்டபத்தில் கூடியிருந்த ஏராளமானோர் கேட்டு ரசித்தனர்.

# உணவு முத்திரை, மதியபோசன நிதி குறைக்குமாறு அரசுக்கு நிபந்தனை

## நாணய சபை விதிக்கிறது!

கொழும்பு, அக். 15

செப்டம்பர் மாதத்தில் ஸ்ரீலங்காவுக்குத் தான் அங்கீகரித்த 2,000 கோடி ரூபாவை வழங்குவதற்கு உணவு முத்திரை, மாணவருக்கான மதிய போசனம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்படும் பணத்தை வெகுவாகக் குறைக்க வேண்டும் என்று சர்வதேச நாணய சபை நிபந்தனை விதித்துள்ளது.

மேலதிக கட்டமைப்பு உதவித்திட்டத்தின் கீழ், என்றுமே இல்லாத அளவுக்கு ஆகக் கூடுதலான [ரூ 2,000 கோடி] பணத்தை வழங்குவதற்கு நாணய சபை தீர்மானித்திருந்தது தெரிந்ததே.

1992 மார்ச் மாதம் தொடக்கம் மூன்று வருடங்களில், ஆறு கட்டங்களில் இப்பணத்தை வழங்க ஏற்பாடாகி இருக்கிறது.

முதலாவது கட்டப் பணத் தொகையை வழங்குவதற்கு நாணய சபை மொத்தம் 20 நிபந்தனைகளை விதித்துள்ளது. உணவு முத்திரை, மதிய போசனத் திட்டங்களுக்கு வழங்கப்படும் பணத்தைக் குறைத்தாக வேண்டும் என்பதும் அந்த இருபது நிபந்தனைகளில் ஒன்றாகும்.

கோதுமை, எரிபொருள் தவிர்ந்த ஏனைய சகல பொருள்களினதும், அரசாங்க இறக்குமதி ஏகபோகம் நீக்கப்பட வேண்டும் என்பதும், அரசாங்கத்துறை வர்த்தகங்கள் தனியார் மயப்படுத்தப்பட வேண்டும் என்பதும் இருபது நிபந்தனைகளில் அடங்கும். (அ)

# ஜேர்மனியில் அகதிகள் மீது தாக்குதல்கள் அதிகரிப்பு!

ஜேர்மனியில் வாழும் வெளிநாட்டு அகதிகள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

கடைசியாக நடந்த சம்பவங்களில் 9 பேர் காயமடைந்தனர் என்று இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

அகதிகள் தங்கியிருக்கும் வீடுகள், கட்டடங்கள் மீது கற்கள் மற்றும் எரி குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மன் மக்களின் இருப்பிடங்களையும் வேலை வாய்ப்புக்களையும் வெளிநாட்டவர்கள் தட்டிச் செல்வதாகக் குற்றஞ் சாட்டும் வலதுசாரி இளைஞர்கள் இத்தகைய தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாட்டவர்களுக்கு எதிராக இதுவரை சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-5]

## இந்திய இடைத்தேர்தல்

# பிரபல இந்தி நடிகர்கள் புதுடில்லியில் மோதல்!

இந்தியாவில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலின் போது புதுடில்லி தெற்கு நாடாளுமன்றத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக பிரபல இந்தி நடிகர் ராஜேஷ்கன்னா போட்டியிடுவார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொகுதியில் பாரதிய ஜனதாக் கட்சி வேட்பாளராக மற்றொரு இந்தி நடிகர் சத்ருகன் சின்ஹா போட்டியிடுவது தெரிந்ததே.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின்போது இந்தத் தொகுதியில் போட்டியிட்ட ராஜேஷ்கன்னா, பாரதீய ஜனதா தலைவர் அத்வானியிடம் சுமார் ஆயிரத்து 500 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டிருந்தார். (உ-எ)

## சாரணர் வாரம் நீடிப்பு

கடந்த 8ஆம் திகதி முதல் நேற்றுவரை இடம்பெற்ற யாழ். மாவட்ட சாரணர்களின் சேவை வாரம் எதிர்வரும் சனிக்கிழமை (19ஆம் திகதி) வரை நீடிக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட சாரண உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ)

## புலிகளை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சாரும் விரைவில் அமைதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

தெற்கில் அப்பாவி மக்களைப் பாதுகாக்க படையினர் நடவடிக்கை எடுத்தனர். வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களையும், வன்முறைகளையும் கைவிடத் தயார் என்றால் அவர்களைச் சமாதான மாநாட்டுக்கு வரவழைக்க நான் தயாராக உள்ளேன், இது விவகாரத்தில் சகல தரப்பினருக்கும் நேசக்கரத்தை நீட்டுகிறேன். ஜனநாயக வழிமுறைக்கு தயாராக உள்ளவர்களுடன் தான் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

### ஆணை பெற சந்தர்ப்பம்

வடக்கு-கிழக்கு பகுதி மக்களின் ஆணையை பெற்றுக் கொள்ள விடுதலைப் புலிகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கத் தயார்.

தேர்தல் அமைதியாக நடைபெறுவதையும், மக்களின் அங்கீகாரத்தை பெற விரும்பும் ஏனைய கட்சிகள் போட்டியிட அனுமதிப்பதையும் விடுதலைப் புலிகள் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறான தேர்தல்கள் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை அரசு புரிந்து கொள்ள முடியும். அதற்கமைய செயல்பட முடியும்.

நல்ல நோக்கமுள்ளவர்களுடன் பேசி, சமரசப் போக்கை கையாண்டு, அதன் மூலம் சமுதாய நலனுக்கு கருத்தொருமைப்பாட்டைக் காண முடியும். இதில் எனக்கு நம்பிக்கையுண்டு. — என்று அவர் கூறினார். [அ-3]

## மேற்குலகத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீலங்கா அரசுத் தலைவர்களுடன் விரிவாகப் பேச்சு நடத்திய பின்னர் அவர்கள் யாழ்ப்பாணம் வந்ததாக அறியவந்தது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் திட்டம் எதனையும் இந்தக் குழுவினர் முன்வைப்பார்களா என்பதை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

இக்குழுவினர் நேற்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சிலரை சந்திக்கவிருந்ததாகவும் தெரியவந்தது.

இதேவேளை—

யாழ்ப்பாணத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்து உரையாடி வருகின்றனர்.

''குவாக்கர்'' சமாதான இயக்கம் பிரிட்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்குகிறது. இந்த இயக்கம் பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் நிறுவப்பட்டது. இப்போது மேற்கு நாடுகளில் மட்டுமன்றி உலகின் எல்லாப் பாகங்களிலும் சேவையாற்றி வருகிறது.

தேவாலய நண்பர்கள் என்றும் அழைக்கப்படும் இந்த இயக்கம் ஆரம்பத்தில் சமூக மறுமலர்ச்சியையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

உலகத்தின் எந்தப் பகுதியிலும் போர் அல்லது சச்சரவு நடந்தால் அதனைத் தவிர்க்க குவாக்கர் சமாதான இயக்கம் பாடுபடும்.

போரை ஒழிக்கப் பாடுபடுவதுடன், அடிமைத் தனத்தை ஒழித்தல், பெண்களின் உரிமைகளுக்குப் பாடுபடுதல், மரண தண்டனையை ஒழித்தல் என்பவற்றுக்காகவும் இந்த இயக்கத்தின் தொண்டர்கள் பல நாடுகளிலும் பணிபுரிந்து வருகின்றனர். (உ-3)

# ஆசிரியர் பற்றாக்குறை குறித்துப் பெற்றோர் புகார்

## பாலம் கலந்துரையாடலில்

நாவாந்துறைப் பகுதியில் மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதற்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை என்று அப்பகுதிப் பெற்றோர்கள் முறையிட்டுள்ளனர்.

அப்பகுதியைச் சேர்ந்த 1,112 மாணவர்களுடன், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வேறு இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த 415 மாணவர்களும் இப்போது கல்வி பயில்கின்றனர்—

ஆனால் மொத்தம் 27 ஆசிரியர்களே தற்பொழுது கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பாடசாலை இடவசதியும் மிகக் குறைவாகவே உள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகிறது— என்று அவர்கள் குறைபட்டனர்.

கரையோரப் பகுதிவாழ் மக்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார, கல்விப் பிரச்சினைகள் குறித்து அண்மையில் பாலம் பணிமனையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது:

அங்கு வைத்தே நாவாந்துறைப் பகுதிப் பெற்றோர்கள் முன்கண்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினர்.

இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்பிராந்தியத் தளபதி சூசையும் கலந்து கொண்டார்.

கரையோரப் பகுதிவாழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் ஆராயப்பட்டன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்தும் அங்கு விவரமாக ஆராயப்பட்டது. [அ]

## நிவாரண விநியோகம்

வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் 'இ' அட்டை உடையவர்கள் இம் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணத்தை (49, 50, 51 ஆம் கட்டங்கள்) இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கக் கிளைகள் மூலம் பெறுமாறு கோரப்பட்டுள்ளது. [உ-3]

## யாழ். இந்து சாரணர் கொடி வாரம்

யாழ்ப்பாணம், அக். 15

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர் குழுவின் 75 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி, இன்று முதல் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை கொடி வாரம் ஒன்றை நடத்தயாழ். இந்து சாரணர் குழு நடவடிக்கை எடுத்திருக்கிறது. [உ]

## திலீபனின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பொலிஸ் கமிஷனர் அனுமதி மறுத்துவிட்டார்;

இதனை ஆட்சேபித்து தியாகராஜன் என்பவர் சென்னை மேல் நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

விசாரணை முடிவில் பொலிஸ் கமிஷனர் அனுமதி மறுத்தது சட்ட விரோதம் என்று மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்து, மாநாட்டை நடத்த அனுமதி அளித்தது.

சென்னை மேல்நீதிமன்ற நீதிபதி எஸ். இராமலிங்கம் தனது தீர்ப்பில் —

''இந்திய அரசமைப்பின் மக்களுக்கு உள்ள உரிமைகளில் பேச்சுரிமை முக்கியமானது; ஜனநாயக நாட்டில் இதனைத் தடுக்கக்கூடாது.

இந்த மாநாட்டினால் சட்டம், ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்று பொலிஸார் நினைத்தால் அதற்கு தகுந்த பாதுகாப்புக் கொடுப்பது பொலிஸாரின் கடமை ஆகும்.''

— என்று தெரிவித்தனர். [இ]

## ஆனையிறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மிதிவெடிகளும், நிலக்கண்ணிகளும் மழையினால் செயலிழந்து போகும் என்றும்—

இது படையினருக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்துவதாக இருக்கும் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார்.

மழைகாலத்திற்கு ஏற்றதான இராணுவ தளபாடங்கள் மற்றும் உடைகள் படையினருக்கு வழங்கத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆனையிறவுக்கும் வவுனியாவுக்கும் இடைப்பட்ட பகுதி, அடுத்த மாதம் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் மீட்கப்பட்டுவிடும் என்று ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க உறுதிபடக் கூறியிருப்பதும் அச்செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [எ]

## பாதுகாப்பு தீவிரம்

திருகோணமலை நகரில் பொலிஸாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் திடீரெனப் மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பொது நூலகம், பெரிய முற்றவெளி, சிவன்கோவிலடி ஆகிய இடங்களிலும் பாதுகாப்பு நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன;

## வெள்ளைப் பிரம்பு தினம் இன்று

யாழ்ப்பாணம், அக். 15

அனைத்துலக வெள்ளைப் பிரம்பு தினம் இன்று அக்டோபர் 15ஆம் திகதியாகும்.

விழிப்புலனற்றோருக்கு நம்பிக்கையையும், தெம்பையும் ஊட்டும் திருநாளாகக் கருதப்படும் இத்தினம் உலக நாடுகள் எல்லாவற்றிலும் அனுஷ்டிக்கப்படுகிறது.

விழிப்புலனற்றோரைச் சமூகத்தில் இருந்து ஒதுக்கி விடாது, அவர்கள் தம்மின் திறமைகளை விருத்தி செய்து, சுயமாக உழைக்க உதவ வேண்டும் என்ற கோட்பாட்டையும் இன்றைய வெள்ளைப்பிரம்பு தினம் புகட்டுகிறது. [அ]

## காமினி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரி தேவை என்றும்—

ஆகையினால் மக்களை அழைத்து கல்லூரி அமைக்க காமினி வித்தியாலயத்தைத் தர முடியாது என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனராம்.

இதனையடுத்து இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது: (உ-3)

## வடக்கே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மண்ணெண்ணெய்யைப் பெறக் கூடியதான வசதியைச் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது;

இதன் மூலம் அநுராதபுரத்தில் இருந்து எடுத்துவரப்படும் மண்ணெண்ணெய் இடையில் களவாடி வவுனியாவில் வைத்து அதிக விலைக்கு விற்கப்படுவதைத் தடுக்க முடியும் என புனர்வாழ்வு அமைச்சு நம்புகிறது. (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

DAY CLASS

வினா - விடை வகுப்பு

★ [கடந்த 10 ஆண்டு பரீட்சை வினாக்கள் செய்து முடிக்கப்படும்]

| | | |
|---|---|---|
| கணக்கியல் | ஸ்ரீ | 12 — 2 |
| வர்த்தகம் | இரட்ணம் | 10 — 12 |
| பொருளியல் | உதயன் | 8 — 10 |

ஆரம்பம்: 16-10-1991 (புதன்)

நிர்வாகி.

[சி-0820]

விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம்

தெல்லிப்பளை.

நிதி சேகரிப்பு மடல்கள்

மேற்படி வாழ்வகத்தின் பெயரில் பொது மக்களிடமும் உறுப்பினர்களிடமும் வழங்கப் பெற்ற நிதி சேகரிப்பு மடல்கள் சில, இன்னும் மீள ஒப்படைக்கப் பெறாமல் இருக்கின்றன. இவற்றை வைத்திருப்போர், உடனடியாக அவற்றை மீள ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

31-10-1991க்குப் பின்னர், இந்நிதி சேகரிப்பு மடல்கள் யாவும் செல்லுபடி அற்றதாகும். ஆதலின் இத்திகதிக்குப் பின்னர் இம்மடல்கள் மூலம் நிதி வழங்காதிருக்குமாறு பொது மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இம்மடல்கள் மூலம் நிதியுதவி வழங்கிய அனைவருக்கும் நன்றி.

முகாமைக்குழு,
வாழ்வகம்.

காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பளை,
22-09-1991.

(இ/0828)

பற்றீஸியன்

தொழிற் பயிற்சி நிறுவனம்

அகில உலக கெயர்

மரவேலை, கட்டுவேலை

பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் இணைந்து எம்மால் நடத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சித் தகைமை:

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்.

பயிற்சிக் காலம்:

2½ மாதம் ஸ்தாபன பயிற்சி;
10 மாதம் பயிலுனர் வேலையான் பயிற்சி.

கொடுப்பனவு:

ஸ்தாபன பயிற்சியின் போது மாதம் 600/ வும், 10 மாத பயிலுனர் பயிற்சியின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

சான்றிதழ்:

பயிற்சி நிலைய பயிற்சி சான்றிதழ், தொழிற் பரீட்சை அடிப்படையில் தேசிய [அரசாங்க] தொழில் சான்றிதழ், சர்வதேச ரீதியிலான கெயர் ஸ்தாபன சான்றிதழ்.

இதர உதவிகள்:

பயிற்சி முடிந்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளைத் தொடங்க கெயர் ஸ்தாபனத்தின் மூலம் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள்:

பதிவாளர், பற்றீஸியன் தொழிற்பயிற்சி நிறுவனம், இல 59, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 25-10-1991 க்குப் பிந்தாமல் நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பதிவாளர்,
பற்றீஸியன் தொழில் நிறுவனம்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-0822]

## நிவாரண அரிசியில் போத்தல் துண்டு, கல்!

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கென அனுப்பி வைக்கப்படும் அரிசியில் பெரும்பகுதி பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதாக முறையிடப்படுகிறது.

அது மட்டுமல்ல, வடமராட்சி கிழக்கில் உள்ள மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படும் அரிசியில் போத்தல் துண்டுகள், கற்கள் போன்ற பொருள்களும் சேர்ந்திருக்கின்றன!

பாவனைக்கு உதவாத இவ்வகை அரிசியின் மாதிரிகள், கடந்த வாரம் அல்வாயில் நடந்த யாழ். செயலக நடமாடும் பிரிவிற்குக் கொண்டு செல்லப்பட்டு, அரசாங்க அதிபரிடம் காண்பிக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகளே பாவனைக்கு உதவாத அரிசியின் மாதிரிகளை எடுத்துச்சென்று அரச அதிபருக்குக் காண்பித்தனர். அது சம்பந்தமாக ஒரு மகஜரையும் அவர்கள் அவரிடம் சமர்ப்பித்தனர்.

பாவனைக்கு உதவாத அரிசி மாதிரிகளைத் தாம் கொழும்புக்கு எடுத்துச் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் காண்பித்து, நல்ல அரிசி தருவிக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் வாக்குறுதி அளித்தார். [அ-144]

## உணவுப் பொருள்களுடன் உரமும் கப்பலில் வந்தது

யாழ்ப்பாணம், அக். 15

பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துள்ள 'குமாரி' கப்பலில் 744 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேற்று உரம் எடுத்துவரப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆயிரத்து 100 மெற்றிக்தொன் அரிசியும் ஆயிரம் மெற்றிக் தொன் மா, 300 மெற்றிக் தொன் சீனி, 65 மெற்றிக் தொன் பால்மா வகைகள், 30 மெற்றிக் தொன் பயறு ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களும் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக் கழகத்துக்கென கொம்பியூட்டர் உபகரணங்கள் அடங்கிய ஐந்து பொதிகளும் ''குமாரி'' கப்பலில் வந்து சேர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

'கெயர்' நிறுவனத்துக்கென மண்வெட்டி வகைகளும், 100 ''பரல்'' மண்ணெண்ணெய் மற்றும் டீசல், பெற்றோல் என்பனவும் கொண்டு வரப்பட்டுள்ளன. [அ-5]

## உரம் உடனடியாக விநியோகிக்கப்பட மாட்டாது

யாழ்ப்பாணம், அக். 15

ஏனைய கலப்பு உரவகைகள் வந்துசேர்ந்த பின்னரே, இப்போது கொண்டுவரப்பட்டுள்ள அமோனியம் சல்பேற்று உரத்தை விவசாய நடவடிக்கைகளுக்கு பங்கீடு செய்வது பற்றித் தீர்மானிக்கப்படும்.

யாழ் அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் இதனைத் தெரிவித்தார்.

'குமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ள 744 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேற்று உரவகை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படமாட்டாது என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த சில தினங்களில் மேலும் ஒரு கப்பலில் வட பகுதிக்கு சில உரவகைகள் எடுத்துவரப்படவுள்ளன என்றும், அவை வந்தபின்னரே தற்போது வந்துள்ள அமோனியம் சல்பேற்றுடன் சேர்த்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகிப்பது பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் அரச அதிபர் சொன்னார். (அ-5)

## உணவுக் கப்பல்கள் மீண்டும் வலைப்பாடு துறைக்கு!

யாழ்ப்பாணம், அக். 15

உணவுக் கப்பல்கள் மீண்டும் வலைப்பாடு துறைக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் முன்னர் இந்தத் துறையிலேயே இறக்கப்பட்டு வந்தன.

காலநிலை சீர் இல்லாத காரணத்தால் இந்தத் துறையில் நடந்த வேலைகள் பின்னர் முள்ளியான் துறைக்கு மாற்றப்பட்டன.

ஆனையிறவு மோதலின் போது இந்தத் துறையில் தரித்து நின்ற இரண்டு இழுவைப் படகுகள் (பாஜ்) விமானக் குண்டு வீச்சால் மூழ்கடிக்கப்பட்டன.

தற்போது மீண்டும் புதிய இழுவைப் படகுகளையும், உணவுக் கப்பல்களையும் வலைப்பாடு துறைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக அறியவருகிறது.

### மனித உரிமைக்காகப் போராடுபவர்

## பர்மா எதிரணித் தலைவிக்கு சமாதான நோபல் பரிசு

ஒஸ்லோ, அக். 15

இவ்வாண்டுக்கான நோபல் சமாதானப் பரிசு பர்மாவில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஆங்சாங் சுகிக்கு (வயது 46) வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை நோபல் பரிசுக் குழு வெளியிட்டிருக்கிறது.

நாட்டில் ஜனநாயகத்தையும் மனித உரிமை பேணலையும் நிலைநாட்டுவதற்கு அஹிம்சை வழியில் போராடி வருவதற்காக நோபல் பரிசுக்கு திருமதி ஆங்சாங் [illegible] புள்ளது.

பர்மா இராணுவ ஆட்சியினரால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக திருமதி சுகி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

### நாட்டுக் கூத்து

யாழ். திருமறைக் கலாமன்றம் எதிர்வரும் 19ஆம் 20ஆம் திகதிகளில் 'செந்தூது' என்னும் நாட்டுக்கூத்தை மேடையேற்றவுள்ளது.

யாழ். பிரதான வீதியிலுள்ள கலாமன்றக் கலையரங்கில் இருதினங்களும் மாலை [illegible] மணிக்கு இந் [illegible] ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் ஊடுருவல் நிறுத்தம் என்கிறார் இந்தியத் தளபதி

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் இந்தியக் கடற்படையின் கப்பல்கள் நிறுத்தப்பட்டதன் மூலம் விடுதலைப்புலிகளின் ஊடுருவல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் எல். ராமதாஸ் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் கடற்படையினருக்கு தமிழக அரசு சிறந்த முறையில் ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் அவர் கூறினார். [த]

### பவன அமுக்கம்

பங்களாதேஷுக்கு சமீபமாக கிழக்கில், வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட பவன அமுக்கம் காரணமாக தென் மேற்குப் பகுதியில் மழை பெய்து வருவதாக வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை செல்வராஜா

(உரிமையாளர், சிவசக்தி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)

திருநெல்வேலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்வராஜா 12-10-91 சனிக்கிழமை காலமானார். இவர் தவமணியின் அன்புக் கணவரும், சசிகலா (டெல்மன் ஆஸ்பத்திரி, கொழும்பு), ஜெகநாதன் (சுவிஸ்), அஜந்தா, சுதாகரன் (சுவிஸ்), நளினி, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தனலக்ஷ்மி, இரத்தினம், பேபிவேலுப்பிள்ளை, அன்னலக்ஷ்மி, ஜெகநாதன் [சவூதி] ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தியாகராஜா, தனபாலசிங்கம் [சுவிஸ்] கலைச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், கிருஷ்ணபிள்ளை, செல்லத்துரை, மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனரும், மிதிலா, துவாரகா, கோகுல்ராம், துஷாரகி ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [15-10-91] இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 4-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இல. 8/6A, புதுச்சிவன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

[18461]

### திருமதி சிவபாக்கியம் நாகலிங்கம்

திருமதி சிவபாக்கியம் நாகலிங்கம் அவர்கள் காலமானார். இவர் மலாயன் பென்சனர் காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் கப்டன் சோமசுந்தரம் (பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), தவலட்சுமி, இந்திரமலர், சந்திரமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகாம்பிகை (ஆசிரியை, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற இராஜா, அருணகிரிநாதர் (ஸ்பிறிங்ஸ், யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேஷ், நிரஞ்சனா, சாந்தா (விவசாய விரிவாக்க நிலையம், முல்லைத்தீவு), இராதா, சுகிர்தா (ஆசிரியை, யாழ். பெரியபுலம் ம. வி), லதா, சரண்ஜா ஆகியோரின் அன்புப் பேத்தியும் திருமதி பொன்னையா தாசரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் இன்று (15-10-91) பி. ப. 2.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியை கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
நா. சோமசுந்தரம்

இல. 1 மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(C/0724)

### முத்துக்குமாரு இரட்ணசிங்கம்

காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தலையாளி கொக்குவிலில் வசித்தவருமான முத்துக்குமாரு இரட்ணசிங்கம் காலமானார். இவர் காலம் சென்ற முகாந்திரம் முத்துக்குமாரு-சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், நாகரெத்தினத்தின் அன்புக் கணவரும், இந்திரரட்ணம், ரஞ்சினி, இரட்ணகுமார், சுமாலினி, கலாஜோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்றவர்களான சபாபதிப்பிள்ளை, வைத்தியலிங்கம், பரிஸ்டர் அம்பலவாணர் ஆகியோரின் சகோதரரும், காலம் சென்ற இரத்தினலிங்கம், நாகேஸ்வரி, சத்தியபாமா, சண்முகநாதன், புவனேசா ஆகியோரின் மைத்துனரும், யோகநாதனின் மாமனாரும், சிந்துஜா, சாளு ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தலையாளி கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் இன்று [15-10-91] காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நா. இரட்ணசிங்கம்

பிரம்படி லேன், தலையாளி,
கொக்குவில்.

[C/0725]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.